சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

1

செய்திமடல் - 93 | 14-03-2013

07-03-2013 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

தலைப்பு : அனைத்துலகப் பெண்கள் நாள் 2013

தொடக்கவுரையாடல் : மங்களா சங்கர்

**பெண்கள் நாள்**

*1910 இல் ஜேர்மனிய சோசலிச ஜனநாயகக் கட்சியின் கிளாரா செற்கினால் முன்மொழியப்பட்டதே சர்வதேச பெண்கள் தினமாகும். 'இரண்டாவது சர்வதேச பெண் தொழிலாளர் கருத்தரங்கினில்' வைத்து அவர் இதனை முன் மொழிந்தார். அவரது பரிந்துரையின் படி, ஒவ்வொரு வருடமும் சகல நாடுகளிலும் அந்த குறிப்பிட்ட நாளில் பெண்கள் அந் நாளைக் கொண்டாட வேண்டும். அப் பரிந்துரையை அந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டிருந்த 17 நாடுகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள், சோசலிசக் கட்சிகள், பெண் தொழிலாளர் அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கும்மேற்பட்ட பெண்கள் அனைவரும் ஏகோபித்து ஏற்றுக் கொண்டதன் விளைவாய் 'சர்வதேச பெண்கள் தினம்' பிறந்தது.*

*1917 இல் போரினில் இரண்டு மில்லியனுக்கும் மேலான உருஷ்யப் படையினர் இறந்ததை அடுத்து, பெப்ரவரி மாதத்தின் கடைசி ஞாயிறு உருஷ்யப் பெண்கள் "பாணும் சமாதானமும்" ("bread and peace") வேண்டி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அரசியல்த் தலைவர்களது எதிர்ப்புகுள்ளும் பெண்கள் தொடர்ந்து நான்கு நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். பிறகு உருஷ்சிய தேசம் தனது அதிகாரத்தை வேறு வழியற்றுக் கைவிட வேண்டியும் வந்தது. பெண்கள் வாக்குரிமை பெற்றார்கள். பெண்களது வேலை நிறுத்தம் தொடங்கிய திகதியானது அப்போது உருஷ்சியாவில் பாவனையிலிருந்த ஜீலியன் கலெண்டரின் அடிப்படையில் 23 பெப்ரவரி 1917 ஆகும் ஆனால் கிறகோரியன் கலெண்டர் பாவனையிலிருந்த ஏனைய இடங்களில் அது மார்ச் 8.*

**சட்டமும் பெண்களும்**

*இலங்கையில் வாழும் மக்களான நாம் பல்வேறு சட்டங்களால் ஆளப்படுகிறோம். தேசவழமை, கண்டியச்சட்டம், முஸ்லிம்கள் சட்டம், பொதுச்சட்டம் போன்றவை இலங்கையில் உள்ளன.*

*இச்சட்டங்களில் பல்வேறு இடங்களில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் பாரபட்சம் காட்டப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன.*

> பெண்கள் அமைப்புக்கள், குறுகிய நடுத்தரவர்க்கத்துப் பெண்களின் பெண்விடுதலைக் கருத்துக்களோடும், அதிகாரவர்க்கத்துக்குப் பாதகமில்லாத செயற்பாடுகளோடும் நிறுத்திக்கொள்ளாமல் பெண்கள் மீது நிகழும் வர்க்கரீதியான ஒடுக்குமுறைகளுக்கும், சமூகத்தில் நிலவும் ஏனைய ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக ஒருமைப்பட்டுப் போராட முன்வர வேண்டும்.

*தேசவழமைச்சட்டத்தை ஒர் எடுத்துக்காட்டாகக்கொண்டால், அதில் ரொம டச்சுச் சட்டத்தின் செல்வாக்குக் காணப்படுவதாகக் கருதப்படுகிறது. குடும்பத்துக்கும் திருமணத்திற்கும் புனித இடம் வழங்கியதாகவும், குடும்ப அமைப்பில் ஆணுக்குப் பெண் சற்றுக் குறைந்தவளாகவும் கருதப்படுதல் அக்காலத்து ரோமன் டச்சுச் சட்டத்தின் தன்மையாகும் (இக்காலத்தில் அது நிறைய மாற்றங்களுக்குள்ளாகிவிட்டது).*

*1707 இல் தேசவழமை கோவைப்படுத்தப்படும்போது அது டச்சு மொழியிலேயே கோவைப்படுத்தப்பட்டது. அதன்போது முன்வைக்கப்பட்ட திருத்தங்களை, "சின்னஞ்சிறிய திருத்தங்கள்" என்று கூறி அதனைக் கோவைப்படுத்தியவர்கள் தவிர்த்திருக்கிறார்கள். இதனால் தேசவழமையில் இருந்த பெண்களுக்கான சிற்சில உரிமைகளும் தவறிப்போயிருக்கவாய்ப்பிருந்தது.*

*சட்டரீதியாக பெண்களுக்கான உரிமைகள் பல உறுதிப்படுத்தப்பட்டிருந்தபோதும் நடைமுறை ரீதியாக அது எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்பதுதான் கேள்விக்குரியதாக இருக்கிறது. காவல் நிலையங்கள் தொடக்கம் நீதிமன்றம் வரைக்கும் ஏற்படும் அசவுகரிகங்களும் இழுபறிகளும் பெண்களுக்கு சட்டரீதியாக உள்ள உரிமைகளைக்கூட பெற விடாமல் தடுக்கின்றன.*

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

தமிழகத்தின் மாணவர் போராட்டங்களும்
ஜெனீவாவில் திண்டாட்டங்களும்
திறந்த கலந்துரையாடல் | 14-03-2013

ஹூகோ சாவேஸ்: வாழ்வும் மரணமும்
கஜேந்திரன் | 21-03-2013



அழகு சுப்பிரமணியம்

*அழகு சுப்பிரமணியம் (மார்ச் 15 1915 - பெப்ரவரி 15, 1973, உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்) ஆங்கில இலக்கியத்துறையில் உலகப் புகழ்பெற்ற இலங்கையர். சட்டத்துறையில் பரிஸ்டர் பட்டம் பெற்ற இவர் இலங்கை உயர் நீதிமன்ற வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார்.*

*நீண்ட காலமாக இங்கிலாந்தில் வாழ்ந்த இவர் "Indian Writing" என்ற காலாண்டுச் சஞ்சிகையின் இணையாசிரியராகவும் "இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின்" இணைச் செயலாளராகவும் பணியாற்றினார்.*

*அழகு சுப்பிரமணியத்தின் ஒரே நாவலான Mister Moon இன்னும் கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது. ஆனால் இதன் தமிழாக்கம் மல்லிகையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது.*

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

**பெண்ணுரிமை அமைப்புக்கள்**

பெண்கள் அமைப்புக்கள், பெண்ணுரிமை அமைப்புக்கள், பெண்ணிய அமைப்புக்கள் எனும் பெயர்களில் உள்ள பல அமைப்புக்கள் தமது நடவடிக்கைகளைப் பெண்கள் தொடர்பான விவகாரங்களுக்குள் மட்டுமே மட்டுப்படுத்திக்கொள்கின்றன. மேலோட்டமான கவன ஈர்ப்பு, அறிவூட்டல், பாலியல் சார்ந்த விடயங்கள் போன்றவற்றுள் தமது செயற்பாடுகளைச் சுருக்கிக்கொள்கின்றன.

பெண்கள் மீதான அடக்குமுறை என்பது எம்மத்தியில் நிகழும் சாதி, இன, வர்க்க அடக்குமுறைகளோடு பின்னிப்பிணைந்த தொடர்பினை உடையது. அவ்வாறிருக்கும் போது பெண் விடுதலைக்கு மட்டும் குரல்கொடுப்போம் என்று மட்டுப்படுத்திக்கொள்வதானது நியாயமற்றதாகவே அமைகிறது.

பெண்விடுதலைக்காக மட்டுமே குரல்கொடுக்கும்போது கூட அதிகாரத்தில் இருப்பவர்கள் நோகாதபடிக்கு மட்டுமே குரல்கொடுக்கும் பாங்கும் பல பெண்ணிய அரச சார்பற்ற நிறுவனங்களிடம் காணப்படுகிறது. பெண்கள் பாரிய முதலாளியச் சுரண்டலுக்கு உள்ளாகும் சுதந்திர வர்த்தக வலயங்கள், பெருந்தோட்டங்கள் போன்றவற்றில் இடம்பெறும் பெண்களும் உள்ளடங்கிய தொழிலாளர்களது போராட்டங்களில் இத்தகைய அமைப்புக்கள் கலந்துகொள்வதுமில்லை போராடுபவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதுமில்லை.

வர்க்க ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை, சாதி ஒடுக்குமுறை எனப் பல தளங்களில் ஒடுக்குமுறை நிலவும் நிலையில் மேற்கண்ட ஒடுக்குமுறைகளை ஆதரிக்கும் பெண்களும் சேர்ந்தே பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுப்பதென்பது அபத்தமானதாகும்.

பெண்கள் அமைப்புக்கள், குறுகிய நடுத்தரவர்க்கத்துப் பெண்களின் பெண்விடுதலைக் கருத்துக்களோடும், அதிகாரவர்க்கத்துக்குப் பாதகமில்லாத செயற்பாடுகளோடும் நிறுத்திக்கொள்ளாமல் பெண்கள் மீது நிகழும் வர்க்கரீதியான ஒடுக்குமுறைகளுக்கும், சமூகத்தில் நிலவும் ஏனைய ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக ஒருமைப்பட்டுப் போராட முன்வர வேண்டும்.

இதேபோன்று, ஏனைய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் அமைப்புக்கள் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும் குரல்கொடுக்க வேண்டியது அவசியமானதாகும்.

**ஊடகங்கள்**


பெண்கள் மீதான அடக்குமுறை, பெண்ணுரிமை போன்ற விடயங்களைப் பேசும்போது நடுத்தர வர்க்க, நகரத்துப்பெண்களின் பிரச்சினைகளை மட்டுமே பேசும் பாங்கு பொதுவாகவே ஊடகங்களிடம் இருக்கிறது. அதிகார வர்க்கத்தினரைப் பகைத்துக்கொள்ளாமல் இருப்பதற்காக ஊடகங்கள் செய்யும் சமரசமே இதுவாகும். இதனாற்தான், நகரத்து நடுத்தர வர்க்கப் பெண்களின் பிரச்சினைகளுக்கு மேலாக வேறெந்த ஆணாதிக்க அடக்குமுறையினையும் நடுத்தரவர்க்கத்தினர் அறியாமலிருக்கிறார்கள்.

இந்த அறியாமை அவர்கள் பங்குபற்றும் விவாதங்கள், உரையாடல்களில் வெளிப்படுகிறது. பெண்கள் சமமாகத்தானே இருக்கிறார்கள், இதற்கு மேல் என்ன உரிமை தேவைப்படுகிறது என்பது போன்ற வாதங்களெல்லாம் இவர்களால் தான் முன்வைக்கப்படுகிறது.

## ஆடுகள் வாழும் கதை

ஆடுகள் கூடிக் கத்தும்
ஆட்டிடையன்
வருவான்...
உந்தி நிறைய உணவிடுவான்
மழை, வெயில் கண்டால்
மனம் பொறுக்கான்
கூடடைத்துக் காப்பான்...
என்றெண்ணிக் கூடிக் கத்தும் ஆடுகள்...
பல ஆடுகள் கண் முன்னே
தலையாட்டி பலியான பின்னும்..
இடையன் வருவான்
இன்னலினின்று காப்பானென
கடைசி ஆடு வரை காத்திருக்கும்...

-பொன். கோபிநாத்




**தமிழகத்தின் மாணவர் போராட்டங்களும் ஜெனீவாவில் திண்டாட்டங்களும்**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**

தமிழகத்தின் மாணவர் போராட்டங்களை விளங்கிக்கொள்ளல்

ஜெனீவாவில் நடப்பதென்ன?

அமெரிக்கத் தீர்மானமும் இந்தியாவின் நிலைப்பாடும்

ஜெனீவாவின் பின்னணியில் இலங்கையரசியலை புரிதல்

தமிழ் மக்களுக்கு விளையப்போவது என்ன?

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.